22.07.2017

தினமணி

## நீர்வளம் காப்போம்

உலகத்திற்கே நீர்மேலாண்மையை கற்பித்த நம் தமிழகத்தில் வீடுகள் தோறும் இருந்த கிணறுகள் மூடப்பட்டு, ஆறுகள் அனைத்தும் கிணறுகளாக தோண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

முன்னோர் கூற்றுப்படி 'உணவே மருந்து' என்று வாழ்ந்து வந்த நாம், இன்று 'மருந்தே உணவு' என மருந்தை மட்டுமே உணவாக்கிக் கொண்ட அவலம் ஏன்? விஞ்ஞான அறிவு வளர்ந்து கொண்டே போகிறது. அனைத்துத் துறைகளிலும் தமிழன் முதலிடத்தில் உள்ளான். நாசா, மைக்ரோசாப்ஃட், மருத்துவம், பொறியியல், கலை என்று அனைத்திலும் தமிழர் பங்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு உள்ளது.

இன்றைய ஏட்டுக் கல்வி நம்முடைய விஞ்ஞான அறிவை அதாவது தொழில் அறிவை வளர்த்துள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தொழில் அறிவு மட்டும் போதுமா? நம் நாட்டில் மிக உயர்ந்த கல்வியாக கருதப்படும் ஐ.ஐ.டி. கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தரப்பட்ட உணவால் ஏற்பட்ட விரும்பத்தகாத நிகழ்வுகள் நமக்கு கற்றுத்தந்த பாடம் என்ன? சற்றே ஆழ்ந்து சிந்தித்தால் தனிமனித வாழ்க்கை என்பது அவனை மட்டுமே சார்ந்தது என்ற தவறான அணுகுதலே அதற்கு காரணம் என்பதை உணர முடியும். எந்த ஒரு தனிமனிதனும் தான்- சமுதாயம்-இயற்கை என்ற முக்கூட்டின் இணைப்பே.

அதில் எந்த ஒன்று பாதித்தாலும் அது தனிமனிதனையும் அவனை சார்ந்த சமுதாயத்தையும், இயற்கையையும் பாதிக்கும் என்பதே உண்மையாகும். நம்முடைய தொழில் கல்வியானது நமக்கும் இந்த சமுதாயத்திற்கும் உள்ள உறவை பற்றிய அறிவை விளக்கவில்லை. ஒரு பிடி உணவை எடுத்துக்கொள்வோம்.

அது எவ்வாறு நமக்கு கிடைத்தது என்றால் நிலத்தை பண்படுத்தியவர்கள், நெல்

விதைத்தவர்கள், தவறாமல் சரியான அளவில் தண்ணீர் பாய்ச்சியவர்கள், களை எடுத்தவர்கள், உரமிட்டவர்கள், அறுவடை செய்தவர்கள், அறுவடை செய்த நெல்லை அரிசியாக பிரித்து பதப்படுத்தி பக்குவமாக வியாபாரத்திற்கு கொண்டு வந்தவர்கள், அதை வாங்கி வந்து நமக்கு சுவையான உணவாக சமைத்து தந்தவர்கள் வரை அனைவருடைய உழைப்பும் மறைந்துள்ளது. பத்து தலைமுறைக்கு சொத்து சேர்த்துள்ளவர்கள் இந்த சமுதாயத்தை காக்கும் முக்கிய பொறுப்பில் உள்ளார்கள் என்பதை உணரவேண்டும். ஏன் என்றால் இந்த சமுதாயம் இல்லை என்றால் அவர்கள் தலைமுறை மட்டும் தனியாக வாழ்ந்து விடமுடியாது.

எத்தனை அறிவியல் முன்னேற்றம் வந்தாலும், தலைசிறந்த கருவிகளை உருவாக்கினாலும், அதை இயக்குவதற்கு ஒரு மனிதன் தேவை. நாம் அனுபவிக்கும் அத்தனையும் இந்த இயற்கையிலிருந்து பெறப்பட்டு, அதன் தரமும், திறனும் மாற்றப்பட்டவையே. இயற்கை என்பது இயல்பானது, யாரும் உருவாக்கியதில்லை, உருவாக்கவும் முடியாது. இயற்கையைப் பாதுகாப்பது நம் அனைவருடைய கடமை. காற்று என்பது இயற்கை, யாரும் காற்றுக்கு உரிமை கொண்டாட முடியாது. அந்த இயற்கையை நாம் மாசுபடுத்தினால் மீண்டும் சரி செய்வது என்பது முடியாத காரியம்.

நீர் என்பது இயற்கை, அதனை யாரும் உரிமை கொண்டாட முடியாது. நிலங்களில் உள்ள நீர்பகுதிகளை உரிமை கொண்டாடலாம். ஆனால் அனைத்து கடலும் பூமிக்கடியில் ஒன்றிணைந்துள்ளது. இயற்கையை நாம் உணராமல் அதை மாசுபடுத்துவதன் மூலம் நமக்கு நாமே தீமை செய்து கொள்கிறோம்.

அதிகாரிகளே, அரசியல்வாதிகளே உங்களிடம் வைக்கும் ஒரே கோரிக்கை தொழில் கல்வியுடன் சமுதாய கல்வியும், இயற்கையை பற்றிய கல்வியும் சேர்ந்து பயிலச் செய்யுங்கள்.

ஒருவர் எதை சாப்பிடவேண்டும் அல்லது வேண்டாம் என்பதை சட்டம் போட்டு மாற்ற முடியாது. மக்களுக்கு உணவைப் பற்றிய தெளிவான அறிவை அளித்தால் மட்டுமே அது சாத்தியம்.

சமுதாய கல்வியும், இயற்கைப் பற்றிய தெளிந்த அறிவும் மட்டுமே அனைத்திற்கும் தீர்வாகும். பன்னாட்டு வியாபாரிகளின் தந்திரம்போல் நாம் விழித்துக்கொள்ளும் வரை மட்டுமே எடுபடும். கருத்து திணிப்பு வேண்டாம். கருத்து தெளிவுதான் வேண்டும்.

பத்து தலைமுறை சொத்து இருக்கும். ஆனால் நம் அடுத்த தலைமுறை இருக்குமா என்று சிந்தியுங்கள். உங்கள் அடுத்த தலைமுறைக்காக சேர்த்து வைத்துள்ள எதையும் அளிக்க வேண்டாம். அடுத்த தலைமுறையை தாண்டி அடுத்தடுத்த பத்து தலைமுறைக்கு சேர்த்துள்ளவர்கள் ஒரு தலைமுறை பங்கை பிரித்து நீர் வளம் காக்க, மண் வளம் காக்க, நதிநீர் இணைக்க தாமாக முன்வந்து தானமாக அளியுங்கள். மரங்கள் வளர்க்க உதவி செய்யுங்கள்.

இரண்டாம் தலைமுறை, முன்றாம் தலைமுறைக்கு சேர்த்தவர்கள் ஒரு பங்கை பிரித்து விவசாயம் காக்க உறுதுணையாக இருங்கள். நீர் இன்றி அமையாது உலகு. நம் அடுத்த தலைமுறை சுகமாக வாழ நீர் வளத்தை காப்பாற்றுங்கள். விவசாயம் அழிந்தால் நாம் அழிவது உறுதி. ஒரு நாள் ஒரு விவசாயியுடன் வாழுங்கள் அல்லது நம் விவசாயி படும் இன்னலை முழுதும் உணர முற்படுங்கள். நமக்கு உணவளிக்கும் விவசாயிக்கு உணவு கிடைக்கிறதா என்பதை உடனிருந்து பாருங்கள். உங்கள் வாழ்க்கை இனிமையாக அமையும். நம் சொத்து, நம் இயற்கை, நம் சமுதாயம், நம் விவசாயம் மட்டுமே. நாம் ஒவ்வொருவரும் இணைந்து இயற்கையையும், விவசாயத்தையும், காப்போம்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**காளான் வளர்க்க பயிற்சி**

காளான் வளர்ப்பது குறித்து, வேளாண் பல்கலைக்கழகம் மூலம், அண்ணாநகரில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.அண்ணாநகரில் இயங்கி வரும்,

வேளாண் பல்கலைக்கழக பயிற்சி மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பு:பயிற்சி மையத்தில், காளான் வளர்ப்பு குறித்து, ஒருநாள் பயிற்சி வகுப்பு, 27ம் தேதி நடக்கிறது. பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள், 044 - 26263484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு, முன்பதிவுசெய்யவேண்டும். காலை, 9:30 மணி முதல், மாலை, 4:30 மணி வரை பயிற்சி நடக்கும். இதில், பங்கேற்பவர்களுக்கு குறிப்பேடு, கையேடு, மதிய உணவு, சான்றிதழ்வழங்கப்படும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 50 ஆயிரம் சந்தன மரக்கன்று நட முடிவு

சேலம் வனத்துறை கட்டுப்பாட்டில், சேர்வராயன் தெற்கு, சேர்வராயன் வடக்கு, ஏற்காடு, டேனீஷ்பேட்டை, மேட்டூர் வனப்பகுதி உள்ளது. அங்கு, 18 ஆயிரம் ?ஹக்டேரில், பல்வேறு வித மரங்கள் உள்ளன. அவற்றை அதிகரிக்கும் நோக்கில், ஆகஸ்டில், சம்பந்தப்பட்ட வனப்பகுதிகளில், 50 ஆயிரம் சந்தன மரக்கன்றுகள் நட முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காக, கன்று தயாரிக்கும் பணி, வனத்துறை அலுவலகம் பின்புறம் சுறுசுறுப்பாக நடப்பதாக, உதவி வனக்காப்பாளர் குமார் தெரிவித்தார்.

## நுண்ணீர் பாசனம் பெற அரசு மானியம்: வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்

கிருஷ்ணகிரி வட்டாரத்தில், குறைந்த நீரில், நிறைந்த மகசூல் பெற, நுண்ணீர் பாசனம் செய்ய, அரசு மானியம் வழங்கப்படுகிறது' என, வேளாண்மை உதவி இயக்குனர் பச்சையப்பன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி வட்டாரத்தில், இந்த ஆண்டு நுண்ணீர் பாசனம் செய்ய துவரை, பச்சை பயறு, உளுந்து, காராமணி, நிலக்கடலை, தென்னை ஆகிய பயிர்களுக்கு, அரசு மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர் பாசனம், மழைத்தூவுவான் ஆகிய பாசன வசதிகள் செய்து தரப்படும். இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், பாசன நீரானது பயிரின் வேர் அருகே கொண்டு சேர்க்கப்படுவதால், ஆவியாதல்

மற்றும் நீர்க்கசிவு இன்றி பாசனம் செய்யப்படுவதால், குறைந்த நீரில் அதிக பரப்பில் பயிர் சாகுபடி மேற்கொள்ள இயலும். பயிருக்கு தேவையான சத்துக்கள் அனைத்தும், திரவ வடிவில் உரங்களாக நீர் கடத்தும் குழாய்கள் மூலமாக பயிர்களுக்கு முழுமையாக கிடைக்கப் பெறுவதால், பயிர் மகசூல் அதிகரிக்கச் செய்கிறது. இதன் மூலம், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதம் மானியத்திலும், பெரு விவசாயிகளுக்கு, 75 சதவீத மானியத்திலும் ?ஹக்டேர் ஒன்றுக்கு, சொட்டுநீர் பாசனத்தில், ஒரு லட்சம் ரூபாயும், தெளிப்பு நீர் பாசனத்தில், 19 ஆயிரத்து, 600 ரூபாயும், மழைத்தூவுவான் பாசனத்தில், 31 ஆயிரத்து, 600 ரூபாயும் என, மானிய வசதியுடன் பாசன வசதி செய்ய, ஆணை வெளியிட்டுள்ளது. இந்த மானியத்தைப் பெற, விவசாயியின் புகைப்படம், சிட்டா, அடங்கல், நில வரைபடம், சிறு மற்றும் குறு விவசாயி சான்று, ஆதார் அடையாள அட்டை, ரேஷன் கார்டு, கிணறு அல்லது போர்வெல் இருப்பதற்கான சான்று, மண் மற்றும் நீர் மாதிரிகள், ஆய்வு முடிவுகள் ஆகியவை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## செடிகளை வளர்க்க நடவடிக்கை தேவை

பள்ளிபாளையத்தில், சாலையோரத்தில் நடப்பட்ட செடிகளை பராமரிக்க கோரிக்கை எழுந்துள்ளது. பள்ளிபாளையம் - வெப்படை சாலை மற்றும் வி.ஏ.ஓ., அலுவலக பின்புற சாலையில், கடந்த சில மாதங்களுக்கு முன், செடிகள் நடப்பட்டு, சுற்றிலும் கம்பிவேலி அமைக்கப்பட்டது. சில நாட்கள் மட்டும் செடிகள் பராமரிக்கப்பட்டன. தற்போது, ஒரு சில செடிகள் தவிர, பெரும்பாலானவை காய்ந்து விட்டன. பல செடிகள் கீழே சாய்ந்து விட்டன. பராமரிப்பு இல்லாததால், வளர்ச்சியில் தடை ஏற்படுகிறது. செடிகளை பராமரித்து, அவற்றை வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 13 லட்சம் கிலோ தேயிலை தூள் ஏலம்

குன்னூர்:நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த

வாரங்களில் நடந்த, 26,27 ஏலங்களில், 60 லட்சம் கிலோ வரை தேக்கமடைந்தது. வடநாட்டு தரகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கோவை, குன்னூர் ஏல மையங்களில், ஏலம் எடுப்பதை புறக்கணித்து வந்ததால் இந்த நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக, 102 தொழிற்சாலைகளில், கடந்த, 15ம் தேதியில் இருந்து பசுந்தேயிலைகளை வாங்கவில்லை. இது தொடர்பாக, கோல்கட்டாவில் உள்ள தேயிலை வாரியத்தில், ஏல மைய நிர்வாகிகள் மற்றும் சிறுதேயிலை உற்பத்தியாளர் சங்கத்தினர் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தினர்.அதில் நடந்த ஆலோசனைகளுக்கு பின் நடந்த, 30வது, தேயிலை ஏலத்தில் ஏராளமான வர்த்தகர்கள் பங்கேற்று, 13 லட்சம் கிலோ தேயிலை தூளை ஏலம் எடுத்தனர்.

சிறுதேயிலை உற்பத்தியாளர் சங்க தலைவர் ஆனந்த் கூறுகையில், "தற்போது பெரும்பாலானோர் ஏலம் எடுத்த நிலையில், ஏலத்தில் முன்னேற்றம் காணப்படுகிறது. இதனால், மீண்டும் பசுந்தேயிலையை கொள்முதல் செய்யும் பணி துவக்கப்பட்டுள்ளது. எனினும், ஏலத்தில் டாடா நிறுவனம் மற்றும் இந்துஸ்தான் கம்பெனிகளும் பங்கேற்றால் பெரும் பயன் ஏற்படும்," என்றார்.

**கால்நடை தீவனமாக மாறும் காய்ந்த சோளப்பயிர்கள்**

தேவதானப்பட்டி, பெரியகுளம் தாலுகாவில் நீரின்றி காய்ந்து வரும் சோளப்பயிர்களை கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தி வருகின்றனர். பெரியகுளம் தாலுகா அ.வாடிப்பட்டி. ஜி.கல்லுப்பட்டி, கெங்குவார்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, குள்ளப்புரம், சில்வார்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி கிராமங்களில் விவசாயம் முக்கியத் தொழிலாக உள்ளது. அதைச் சார்ந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. வளா?க்கப்படுகின்றன.

இந்நிலையில் வறட்சியைத் தாங்கி வளர்ந்து 120 நாளில் பலன் தரக்கூடிய சோளம் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இதில்

கட்டுபடியான விலை கிடைத்து வருகிறது. மேலும் அறுவடைக்கு பின் தட்டை கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுகிறது. எப்படியும் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் முதலக்கம்பட்டி, கோயில்புரம், சிந்துவம்பட்டி கிராமங்களில் 200 ஏக்கரில் சோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கதிர் வெளியேறி பால்பிடிக்கும் போது தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் கதிர்கள் காய்ந்து வருகின்றன. இதனிடையே விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ள சோளப்பயிர்களை அறுவடை செய்து கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தி வருகின்றனர். கோவில்புரம் விவசாயி சுப்பையா கூறுகையில், "முன் எப்போதும் இல்லாத அளவிற்கு வறட்சி நிலவுகிறது. விளைச்சல் பாதிப்பு ஏற்பட்டதால் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சோளப்பயிர்களை கால்நடை தீவனத்திற்காக அறுவடை செய்கிறோம், "என்றார்.

**கருஞ்சாம்பல் நோயால் திராட்சை பாதிப்பு**

கம்பம், கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி செய்யப்பட்டுள்ள திராட்சையில் கருஞ்சாம்பல் நோய் தாக்கி, பழங்கள் சிறுத்து காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கில் காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி,அணைப்பட்டி, ராயப்பன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி,குள்ளப்பகவுண்டன்பட்டி, கம்பம், ஓடைப்பட்டி, வெள்ளயைம்மாள்புரம்உள்ளிட்ட பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது.

அதனால்தான் தான் இப்பகுதியில்ஒயின் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்த தொழிற்சாலையில் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுவதில்லை. காரணம்போதிய தரமின்மை உள்ளதாக கூறப்படுகிறது.

அதற்குபிறகு இப்பகுதியில் திராட்சை சாகுபடியை மேம்படுத்தவும்,ஏற்றுமதி ரகம் மற்றும் ஒயின் ரகம் சாகுபடி செய்யவும் திராட்சைஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் திராட்சை விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பு தொடர்கிறது.

மழையில்லாததால் சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. இந்நிலையில் திராட்சையில் கருஞ்சாம்பல்நோய் தாக்கி வருகிறது. இதனால் பழம் நிறம் மாறுவதும்,சிறுத்து போவதுமாக உள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்நோயை கட்டுப்படுத்த தேவையான பரிந்துரைகள்செய்ய தோட்டக்கலைத்துறை முன்வர வேண்டும். சாம்பல் நோய் தாக்காத ரகம் ஆய்வில் இருப்பதாகவும், விரைவில் அறிமுகம் செய்யப்படும் என்ற ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி நிலையத்தின் அறிவிப்புஎன்ன ஆனது என்பதும் தெரியவில்லை என்று விவசாயிகள் புலம்பிவருகின்றனர்.

தினத் தந்தி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஈரோடு கருங்கல்பாளையம் சந்தையில் 800 மாடுகள் விற்பனை



ஈரோடு கருங்கல்பாளையத்தில் உள்ள மாட்டுச்சந்தை வாரம்தோறும் புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் நடந்து வருகிறது. அதன்படி நேற்று

முன்தினம் நடந்த சந்தைக்கு, 250 வளர்ப்பு கன்றுக்குட்டிகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில் ஒன்று ரூ.2 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை விலை போனது.

நேற்று 2-வது நாள் சந்தை கூடியது. இதற்கு நேற்று முன்தினம் இரவே விவசாயிகள் தங்களது மாடுகளை வாகனங்களில் கொண்டு வரத்தொடங்கினார்கள். ஈரோடு, சேலம், உள்பட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் அதிக அளவில் மாடுகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

500 பசு மாடுகள், 400 எருமை மாடுகள் என மொத்தம் 900 மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் எருமை மாடு ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.18 ஆயிரத்துக்கும், அதிகபட்ச விலையாக ரூ.36 ஆயிரத்துக்கும் விற்பனையானது. பசுமாடு ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.16 ஆயிரத்துக்கும், அதிகபட்ச விலையாக ரூ.32 ஆயிரத்துக்கும் விற்பனையானது. மொத்தம் 800 மாடுகள் விற்பனை ஆனது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், ஆந்திரா, கேரளா, கோவா போன்ற வெளிமாநிலங்களில் இருந்தும் வந்திருந்த வியாபாரிகள் மாடுகளை விலைபேசி பிடித்து வேன் மற்றும் லாரிகளில் ஏற்றிச்சென்றனர்.

**பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகள் காப்பீடு செய்து பயன்பெறலாம்**



சின்னசேலம் வட்டார வேளாண்மை துறை சார்பில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் மற்றும் நுண்ணீர் பாசன திட்டம் பற்றி விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. முகாமில் வேளாண்மை துணை இயக்குனர் செல்வராஜ் கலந்து கொண்டு நடப்பு காரிப் பருவத்தில் சாகுபடி செய்யக்கூடிய நெல், மக்காச்சோளம், பருத்தி மற்றும் மணிலா பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்வதன் அவசியத்தையும், வழிமுறைகள் பற்றியும் பேசினார்.

மேலும் பயிர் விதைப்பு அல்லது நடவு காலத்தில், அறுவடையின் போது இயற்கை சீற்றத்தால் மற்றும் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து விவசாயிகள் தங்களை காத்துக்கொள்ள பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து நெல்லுக்கு ஏக்கருக்கு வருகிற 31–ந் தேதிக்குள் 471 ரூபாயும், ஒரு ஏக்கர் மக்காச்சோளத்துக்கு 260 ரூபாயும், மணிலாவுக்கு 420 ரூபாயும், பருத்திக்கு ஆயிரம் ரூபாயும் என அடுத்த மாதம் (ஆகஸ்டு) 15–ந்தேதிக்குள் காப்பீடு செலுத்த வேண்டும்.

இந்த காப்பீட்டு தொகையை சின்னசேலம் பகுதி விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தி பயன்பெறலாம் என்றார்.

இதில் வேளாண்மை அலுவலர் விஜயலட்சுமி, 10 விவசாயிகளுக்கு ரூ.3 லட்சத்து 72 ஆயிரத்து 450 மதிப்பிலான நுண்ணீர் பாசன கருவிகளை வழங்கினார். முகாமில் உதவி விதை அலுவலர் ராமர், உதவி வேளாண்மை அலுவலர்கள் தியாகராஜன், முருகேசன், துரை, நாகராஜன், ரஜினிகாந்த் மற்றும் வங்கி மேலாளர்கள், கூட்டுறவு வங்கி செயலாளர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர். முடிவில் துணை வேளாண்மை அலுவலர் முத்துகிருஷ்ணா நன்றி கூறினார்.